விக்னா கல்வி நிறுவனம்
93, 94
கலை வர்த்தகம்
கணக்கியல்
S. K. பிரபாகரன்
அளவையியல்
திரு. விக்கி

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

விக்னா கல்வி நிறுவனம்
93, 94
கலை வர்த்தகம்
பொருளியல்
திரு. கலாகரன்
வர்த்தகம்
திரு. தேவா

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 11 புதன்கிழமை (24-03-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 117

## பூநகரிப் பாதையை திறப்பது புலிகளை சாந்தப்படுத்தவா?

### காமினி ஜெயசூரியா அச்சம்

கொழும்பு, மார்ச் 24

சங்குப்பிட்டி - பூநகரிப் பாதையைத் திறக்கும் திட்டம் படையினரின் போர் உத்திகளை பாதிப்பதாகவோ—

அல்லது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சாந்தப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும்ஒரு நடவடிக்கை என்றோ கருத அனுமதிக்கப்படக் கூடாது.

மகாபோதி சங்கத் தலைவரும், சிங்களவர் பாதுகாப்புச் சங்கத் தலைவருமான ஜெயசூரியா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

போருபாயங்களுக்காகவே இப்பாதையை ஆயுதப்படையினர் முடியதாக நாம் அறிகின்றோம்.

இப்பாதையை மீண்டும் திறக்கும்போது படையினரின் போருபாயங்கள் பாதிக்கப்பட்டால் அது விடுதலைப் புலிகளை சாந்தப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ற எண்ணத்தை ஏற்படுத்தலாம்.

ஆகவே இந்த அம்சத்துக்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

## 4 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்தில் 4 விடுதலைப் புலிப் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

அவர்களின் விவரம் வருமாறு;

★ கப்டன் நம்பி - சுட்டா [பூபாலபிள்ளை லோகிதராசா — திருமலை]

★ கப்டன் முடியரசன் அல்லது ரவி [சித்திரவேல் முத்துலிங்கம் - திருமலை]

★ லெப்டினன்ட் மெய்யப்பன் - அன்ரன் [குப்பு ஐயர் நாகேந்திரன் - திருமலை]

★ லெப்டினன்ட் மறைக்கோன் அல்லது விஸ்வநாதன் [கந்தவனம் நிமலநாதன் - திருமலை.] (த)

இரு நாட்டு இராணுவங்களுடன் போராடும்

## திறமைமிக்க தலைவர் பிரபா அதனால் பாராட்டுகிறேன்!



அமைச்சர் தொண்டா

### அமைச்சர் தொண்டா பேட்டி

கொழும்பு, மார்ச், 24

திரு. பிரபாகரனை நான் வியந்து போற்றுகிறேன்.

திரு. பிரபாகரன் வியந்து பாராட்டப்படுகிறார்.

இரு நாடுகளின் இராணுவங்களுடன் நின்று பிடிக்கக் கூடிய திறமையுடன் அவர் தமது போராளிகளை வழி நடத்தி வருகிறார். அவரது இயக்கம் இன்று பெரும் இயக்கமாக வளர்ந்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

தலைவர் பிரபாகரனுக்கு அமைச்சர் தொண்டமான் அனுப்பிய கடிதம் குறித்த கேள்வியுடன் தொடங்கப்பட்ட அந்தப் பேட்டியின் விவரம் வருமாறு;-

(4 ஆம் பக்கம் பார்க்க)



தலைவர் பிரபா

# ஆனையிறவை அண்டி விமானக் குண்டு வீச்சு!

## நேற்றும், முன்தினமும் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஆனையிறவை அண்டிய பிரதேசங்களில் நேற்றும் நேற்று முன்தினமும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்றுக்காலை 7-45 மணியளவில் பளை, இயக்கச்சிப் பகுதிகளை வட்டமிட்ட ஸ்ரீலங்கா விமானப் படையின் மூன்று பொம்மர்கள் புதுக்காட்டுச் சந்திக்குச் சமீபமாக ஆறு குண்டுகள் வரை வீசின.

இதனால் அப்பகுதியில் இருந்த பல தென்னங்கன்றுகள் நாசமாகின.

குண்டு வீசப்பட்ட இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் இருந்த சோரன்பற்று கணேசா வித்தியாலயத்திற்கு அவ்வேளையில் வந்திருந்த மாணவர்கள் தெய்வாதீனமாகக் காயம் எதுவுமின்றித் தப்பினர்.

பெரிய சத்தத்துடன் வெடித்த விமானக் குண்டுகளினால் அப்பகுதியில் தென்னந்தோட்டத்தில் இருந்த ஒருவரின் கேட்கும் திறன் பாதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் —

அல்லிப்பளை படகுத்

(3ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால விதிகளின் கீழ் கைது செய்வதை நிறுத்துக!

### சட்டமா அதிபர் உத்தரவு

கொழும்பு, மார்ச் 24

அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் சந்தேகநபர்களைக் கைது செய்வதை நிறுத்தும் படி சட்டமா அதிபர் திலக் மாரப்பான பொலீஸ் திணைக்களத்தைப் பணித்துள்ளார்.

சந்தேகத்துக்குரியவர்களை சாதாரண சட்டத்தின் கீழேயே கைது செய்து விசாரிக்க வேண்டும் என்றும் குற்றப் புலனாய்வுப் பணியகப் பணிப்பாளர் லயன்ஸ் குணதிலகாவை சட்டமா அதிபர் பணித்திருக்கிறார்.

சட்டம் — ஒழுங்கைப் பராமரிப்பதற்குப் பொறுப்பான அதிகாரிகள் அவசரகாலச் சட்டம் என்ற போர்வையின் கீழ், மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்துமுகமாகவே சட்டமா அதிபர் இந்த நடவடிக்கையை எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்வது, தடுப்புக் காவலில் வைப்பது ஆகியவை தொடர்பான அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் விரிவான முறையில் விரைவில் மீளாய்வு செய்யப்படும் என இம்மாதம் ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுக் கூட்டத்தில் இலங்கைக் குழுவுக்குத் தலைமை வகித்துச் சென்ற சட்டமா அதிபர் திரு. மாரப்பான உறுதியளித்து இருந்தார். (உ-எ)

## வவுனியாவில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 24

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில்வவுனியா நொச்சிமோட்டை இராணுவ முகாம் காவலரண் பகுதியில் இருந்து மக்கள் குடியிருப்புக்கள் மீது பரவலான துப்பாக்கிப் பிரயோகமும், ஷெல் தாக்குதலும் நடத்தப்பட்டது. (த)

## 2,000 அகதிகள் நாடு திரும்புவர்

சென்னை, மார்ச் 24

தமிழ்நாடு, மண்டபம் முகாமில் தங்கியுள்ள 2 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் தாயகம் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும்—

இவர்களை ஏற்றிச் செல்வதற்கான கப்பல் ஒழுங்கு செய்யப்பட்டு விட்டதாகவும் இராமநாதபுர[illegible] ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக வோல்டர்

கொழும்பு, மார்ச் 24

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக எயர் வைஸ் மார்ஷல் வால்டர் பெர்னாண்டோ கடந்த வாரம் ஜனாதிபதி பிரேமதாஸாவால் நியமிக்கப்பட்டார்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சின் செயலாளராக இவர் இதுவரை பணிபுரிந்து வந்தார்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சுச் செயலாளராக திரு. மஹிந்த பத்துசேன நியமிக்கப்படலாம் என்று தெரிய வருகிறது

பாதுகாப்பு அமைச்சில் (பொலீஸ் பிரிவின்) மேலதிக செயலாளராக தற்போது பணியாற்றி வரும் இவர், ஒரு சிவிலியன் அதிகாரி ஆவார். [உ-எ]

## மாகாண சபைத் தேர்தலுக்கு பதில் சர்வசன வாக்கெடுப்பு நடக்கும்?

### வடக்கு-கிழக்கு இணைப்பும் ஒரு கேள்வி

கொழும்பு, மார்ச் 24

★ வடக்கு - கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் இணைக்கப்பட்டே இருக்கவேண்டுமா?

★ வடக்கு - கிழக்கு சமஷ்டி மாநிலமாக்கப்பட வேண்டுமா?

★ மாகாணசபை முறை தொடரவேண்டுமா? அதனை மக்கள் விரும்புகிறார்களா?

— இந்த மூன்று முக்கிய விடயங்களை முன்வைத்து மக்களின் விருப்பத்தை அறிவதற்காக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த அரசு திட்டமிட்டுள்ளதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

மாகாண சபைத் தேர்தல் கூடு தென்பகுதியில் ஏற்பட்டுள்ள போதிலும் தேர்தல் நடத்தப்படுமா என்பது குறித்து எதிர்க்கட்சி வட்டாரங்களில் சந்தேகம் நிலவுகிறது.

மாகாண சபைத் தேர்தலுக்குப் பதிலாக சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவே அரசு பெரிதும் விரும்புவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1988 இல் பிரதேச சபைகளின் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், தேர்தல் நடத்தப்படாமற் போனதை இவ்வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

திட்டமிடப்பட்டுள்ள மாகாணசபைத் தேர்தலிலும் இதுபோன்று நடக்கக் கூடும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு, வாக்காளரின் அரசியல் மனோநிலை அறியப்பட்டதும், திடீர் ஜனா

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலிக் கடலோரத்தில் 2 சடலங்கள் கரை ஒதுங்கின

தென்மராட்சி, மார்ச் 24

கடந்த வெள்ளியன்று கிளாலிக் கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்ற பின்னர் காணாமற் போனதாகக் கருதப்படும் மூவரில் இருவரின் சடலங்கள் கரை ஒதுங்கியபோது மீட்கப்பட்டன.

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து பண்டிதர் குடியிருப்பில் வசித்த ச. உதயகுமார் [வயது 18] என்பவரின் சடலம் நேற்று முன்தினம் காலை கிளாலிக் கரையில் கரை ஒதுங்கியது.

வேலணை துறையூரைச் சேர்ந்தவரும் பண்டிதர் குடியிருப்பில் வசித்தவருமான செ. சாந்தலிங்கம் (வயது 45) என்பவரின் சடலம் நேற்றுக் காலை கரை ஒதுங்கியது. இவர் வ. பி. போ. சவில் மேக்கானிக்காகக் கடமையாற்றியவர்.

இவர்களுடன் சென்று பின்னர் காணாமற் போனதாகக் கூறப்படும் மற்றைய நபரான க. குணசிலனின் (வயது 22) சடலம் கறுக்காய்வெளி இராணுவக் காவலரண் பகுதியில் கரை ஒதுங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ம. எண்ணெய் பரல்கள் நில்கிரியிலிருந்து இறக்கம்

நெல்லியடி, மார்ச் 24

நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த ''நில்கிரி'' கப்பலில் இருந்து மண்ணெண்ணெய் பரல்களை இறக்கும் வேலை உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது.

இக்கப்பலில் 740 பரல் மண்ணெண்ணெய் எடுத்து வரப்பட்டது. இரண்டு புதிய பாஜ்களையும் இக்கப்பல் இழுத்து வந்தது.

இரண்டு பாஜ்களையும், பத்து பரல் மண்எண்ணெயையும் காங்கேசன் துறைமுகத்தில் விட்டு விட்டு ''நில்கிரி'' நேற்றுகாலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தது. உடனடியாக ம.எண்ணெய் பரல்களை இறக்கும் வேலை துரிதமாக ஆரம்பிக்கப்பட்டது.

எண்ணெய் பரல்களைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் மண்எண்ணெய் குடும்பத்துக்கு ஒரு லீற்றர்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். குடாநாட்டில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மேலும் ஒரு லீற்றர் மண்எண்ணெய் பதினைந்து ரூபாவுக்கு விநியோகிக்கப்படவிருக்கிறது:

''நில்கிரி'' கப்பலில் இரண்டாவது தொகுதி மண்எண்ணெய் [illegible] அடுத்தே இவ்வாறு [illegible]

இக்கப்பலில் இருந்து இறக்கப்பட்ட மண்எண்ணெய் பரல்களில், தமக்கு ஒதுக்கப்பட்டவற்றை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பருத்தித்துறையில் வைத்து உடன் பொறுப்பேற்று இரண்டாவது தடவையாகவும் பொது மக்களுக்கான ம. எண்ணெய் விநியோகத்தை மேற்கொள்ளும் படி கேட்கப்பட்டிருக்கின்றன. [உ-162]

## சு.க. அணி வேட்பாளராக சந்திரசேகரன் போட்டி?

மத்திய மாகாண சபைக்கான தேர்தலில் மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. சந்திரசேகரனை ஒரு வேட்பாளராக நிறுத்துவது என்று சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுமக்கள் அணி ஏகமனதாக முடிவு செய்துள்ளது.

பொதுமக்கள் அணியின் சில வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டுள்ளது.

கூட்டுப்படைத் தலைமையகம் மீதான வெடிகுண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி எனக் கருதப்படும் — விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவரான— வரதன் என்பவருக்கு புகலிடம் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் சந்திரசேகரன், தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறார். (உ-எ)

வடக்கே கப்பலில் அனுப்பப்பட்ட

## உணவுப் பொருளில் மோசடி: 50பேர் வரை விசாரணையில்!

கொழும்பு, மார்ச் 24

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் வடபகுதிக்கு அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களில் சுமார் 16 கோடியே 60 லட்சம் ரூபா பெறுமதியானவை மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக இதுவரை 50 க்கும் மேற்பட்டோர் இரகசியப் பொலீஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மற்றும் துறைமுகம் ஆகியவற்றில் பணிபுரிபவர்களே இவர்கள்.

இவர்களது வாக்குமூலங்கள் இரகசியப் பொலீஸாரினால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வடபகுதிக்கு அனுப்பப்பட்ட பொருள்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கையை இரகசியப் பொலீஸார் எதிர்பார்த்துள்ளனர் என்றும், இந்த மோசடியில் சம்பந்தப்பட்ட முக்கிய புள்ளிகளான அரச அதிகாரிகள் சிலர் கைது செய்யப்படலாம் என்றும் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இப் பொருள்கள் பண்டசாலைகளில் இருந்து துறைமுகத்துக்கு வரும் வழியிலும்— கப்பலில் ஏற்றப்பட்டு காங்கேசன்துறைக்கு கொண்டு

(3ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### மணப்பெண் தேவை

வயது 30, நட்சத்திரம் பரணி, 7இல் செவ்வாய் உள்ள அழகிய படப்பிடிப்பாளருக்கு 28 வயதுக்கு உட்பட்ட அழகிய மணமகள் தேவை. குறிப்புடன் உடன் தொடர்பு கொள்ளவும்: இல. 895. மே/பா உதயன் (6069)

### மணப் பெண் தேவை

புனர் பூசம், 4ஆம் கால், நக்ஷத்திரமும், 5' 4''க்கு குறைந்த உயரமும் 40க்கு மேற்பட்ட வயதுடையதுமான யாழ். இந்து விவாகமாகாத மணப் பெண் தேவை. ஜாதகத்துடன் ரூபா 1/- முத்திரை இணைத்து தபாலில் விண்ணப்பிக்கும் சகலருக்கும் பதில் அனுப்பப்படும். மே/பா. 896, உதயன், யாழ்ப்பாணம். 6068)

### தேவை

20 — 40 வயதிற்கு இடைப்பட்ட தோட்ட வேலை, கோவில் பல வேலை போன்றன செய்யக் கூடிய ஒருவர் உடன் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும். விவரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். துர்க்கை அம்பாள் தேவஸ்தானம், சாவகச்சேரி (24935)

### இலவச திருமண சேவை

35 வயது, விசாகம், தோஷமற்ற, படித்த, அழகிய மணப்பெண்ணுக்கு மணமகன் உள்நாட்டில் / வெளிநாட்டில் தேவை. சீதனம் வழங்கப்படும். மணமக்களின் தொடர்பு: ஞாயிறு காலையில், விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி (21922)

## மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

அகதிகளாக யாழ் நகரில் தங்கியுள்ள நெடுந்தீவைச் சேர்ந்தவர்களுக்கும் புங்குடு தீவு பல நோ. கூ. சங்கத்தினூடாக மண்ணெண்ணெய் வழங்க வேலணை உதவி அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். (த-111)


UNIVERSITY OF JAFFNA

## TENDER NOTICE

Tenders are invited from Contractors registered for Civil Engineering Works with University of Jaffna or ICTAD for Repairs/External painting to Arts Complex.

Tender forms can be obtained from Works Engineer University of Jaffna from 1993-03-30 - 1993-04-01 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the following tender fees.

a) Refundable - Rs. 2,000/-
b) Non-Refundable - Rs. 200/-

Tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 10-00 a. m. on 1993-04-20.

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.

- REGISTRAR,
University of Jaffna.

P. O Box 57,
Thirunelvely
Jaffna.

[C 4573]


## நாளை

மார்ச் மாதத்தில் வீரமரணமடைந்த உடுவில் வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களை நினைவுகூரும் வீர வணக்கக் கூட்டம் நாளை வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு சங்குவேலி பிள்ளையார் கோவில் வீதியில் உடுவில் வட்டப் பொறுப்பாளர் திரு. கலையரசன் தலைமையில் நடைபெறும். (க-152)

o o o

அறவழிப் போராட்டக்குழு நடத்தும் இடம்பெயர்ந்தோர் சுயசார்புப் பயிற்சி தொழிலக ஆரம்ப விழா நாளை காலை 10.30 மணியளவில் நாவற்குழி எழுச்சிக் கட்டடத்தில் நடைபெறும். (த-162)

## பாடசாலைகளில்

இளவாலை புனித. ஹென்றியரசர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1-30மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (ஒ)

o o o

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல்1-30மணிக்கு இணுவில் சைவப்பிரகாச ம. வி. விளையாட்டரங்கில் அதிபர் திரு க. நாகராசா தலைமையில் நடைபெறும். (க)

o o o

குடத்தனை - பொற்பதி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பாடசாலை அதிபர் திரு சி. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் (க-144

o o o

பளை கோத்தணி மட்ட பாடசாலைக்கான உடற்பயிற்சிப் போட்டி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பளை மகா வித்தியாலயத்தில நடைபெறும் (க-ரி)

o o o

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் மெய்வன்மைப் போட்டி இன்று புதன் பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு து. சந்தோசம் தலைமையில் நடைபெறும். (ஒ)

o o o

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1 30 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். (த)

## மே 15இல் தேர்தல்?

கொழும்பு, மார்ச் 24

தென் இலங்கையில் உள்ள ஏழு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் மே மாதம் 15ஆம் திகதி நடத்தப்படும்.

அதிகார வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''சண்டே ரைம்ஸ்'' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது. [உ-எ]

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

நாளை வியாழக்கிழமை நடைபெறவிருந்த மரியாயின் சேனையின் வருடாந்த ''ஆச்சேஸ் விழா'' தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். ஆயர் இல்ல பொது நிலையினர் பணியகம் அறிவித்துள்ளது.

இவ்விழா பற்றிய அறிவித்தல் எதிர்வரும் 4 ஆம் திகதி நடைபெற இருக்கும் கொமிசியக் கூட்டத்தில் அறிவிக்கப்படும் என்று அதன் தலைவர் தெரிவித்துள்ளார். (ஒ)

## இலங்கையர் கைது

சென்னை, மார்ச், 21

இலங்கைக்குக் கடத்துவதற்காக ஒரு கோடியே 70 லட்சம் ரூபா பெறுமதியான ஒரு கிலோ போதைவஸ்துவை பொதி செய்து கொண்டிருந்த இலங்கைப் பிரசை ஒருவரையும் மற்றொருவரையும் சென்னை உளவுப் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

துப்பு ஒன்றை அடுத்து, சென்னை பரங்கிமலைப் பகுதியில் வீடொன்றை பொலிஸார் திடீரென முற்றுகையிட்டு சோதனை நடத்திய போதே இவர்கள் பிடிபட்டனர். (உ-எ)


சுன்னாகம்

## ஐயனார் கோவில் வருடாந்த உற்சவம் - 1993

மேற்படி ஆலய மகோற்சவம் 26-03-1993 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11தினங்கள் நடைபெறும். இவ் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்ய விரும்புவோர். 24-03-1993 புதன்கிழமை காலை 9-30 மணியளவில் ஆலயத்திற்கு வந்து கேள்விகளின் முன் உரிமைப்படி கடைகளைப் பெற்றுக் கொள்ளவும்.

— சுன்னாகம் ஐயனார் ஆலயம்.

(சி-2547)


## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட வெங்கடேசப் பெருமாள் 'கணேசா' ஆகிய நான் இதுவரை காலமும் 'கணேசா' என வழங்கி வந்த பெயரினை என் சோதிட ஆய்வாளர் திரு. எஸ். என்-பாலன் [குளப்பிட்டி] என்பவர் மூலமாக எனது பெயரில் சிறுமாற்றம் செய்து.

### கிருஷ்ணன் வெங்கடேசப்பெருமாள் கணேசலிங்கம்

என மாற்றியமைத்துள்ளேன் என்பதை ஸ்ரீலங்கா அரசுக்கும், நண்பர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
கி. வெ. கணேசலிங்கம்.

298, K. K. S வீதி,
யாழ்ப்பாணம்.

[24918)

## முக்கிய அறிவித்தல்

25 03-1993 வியாழன் நடைபெறவிருந்த சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணங்களால் 27-03-93 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் என்பதனையும், பழைய நிகழ்ச்சித் திட்டமே அடிப்படையாய் அமையும் என்பதனையும் அறியத்தருகின்றோம். ஏற்பட்ட சிரமங்களுக்கு வருந்துகின்றோம்.

கலாநிதி அ. நவரத்தினராசா
தலைவர்

கலாநிதி த. நடேசன்
பொருளாளர்

திரு. க. சிவானந்தமூர்த்தி
செயலாளர்

(C/4578)

## இறிமாவின் முடிவுக்கு மாறாக

# பதில் எதிர்க்கட்சித் தலைவர் அநுரா என அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

பதில் எதிர்க்கட்சித் தலைவராக திரு. அநுரா பண்டாரநாயக்காவை ஏற்றுக்கொள்ளுவது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் எம். எச். முஹம்மது நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று கூடியபோது பதில் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்று வினவும் அறிக்கை ஒன்றை சபை முதல்வரும் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கா சபையில் வெளியிட்டார்

பதில் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பது தெரியவில்லை என்று அவர் அதில் தெரிவித்திருந்தார்.

அப்போது சபாநாயகர் — வெளிநாடு செல்வதற்கு முன்னர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமக்கு எழுதிய கடிதம் ஒன்று பற்றி பிரஸ்தாபித்தார்.

தாம் நாடு திரும்பும் வரை தமது கடமைகளை திரு. கே. பி. இரத்நாயக்கா கவனித்துக் கொள்வார் என்று திருமதி பண்டாரநாயக்கா அக்கடிதத்தில் தெரிவித்திருப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இதேவேளை —

45 சுதந்திரக்கட்சி எம். பிக்கள் திரு. அநுரா பண்டாரநாயக்காவை பதில் எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக் கொள்ளும்படி கடிதம் ஒன்றைச் சமர்ப்பித்திருப்பதாகத் தெரிவித்த சபாநாயகர் —

அக்கோரிக்கையை ஏற்றுத் தாம் திரு. அநுராபண்டாரநாயக்காவையே பதில் எதிர்க்

(3ஆம் பக்கம் பார்க்க)


SCHOOL OF FINE ARTS
திருமறைக்கலாமன்ற
கவின் கலைகள் பயிலகம்
வழங்கும்

## "புல்லாங்குழல் கச்சேரி"

வழங்குபவர்:
வேணுகானமணி திரு. அ. நமசிவாயம் அவர்கள்

காலம் : 24 - 03 - 93 மாலை 6.45 மணி
இடம் : மன்ற அரங்கு

பிரவேசம் இலவசம்

திருமறைக் கலாமன்றம்
(சி-4577)


## கண்ணீர் அஞ்சலி

பேராசிரியர்
### வன்னியசேகரம் கருணைநாதன்
MBBS (Cey) FRCS (E)
(29-09-1931 - 21-03-1993)

யாழ். மருத்துவபீடத்தின் முன்னாள் சத்திர சிகிச்சைதுறைத் தலைவரும், சத்திரசிகிச்சை நிபுணருமான பேராசிரியர் வ. கருணைநாதன் அவர்கள் 21 - 03 - 1993 அன்று மறைந்துவிட்டமை எம்மைப் பெருந்துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரது மறைவு எமக்கு ஈடிணையற்ற இழப்பாகும். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

மருத்துவபீட ஆசிரியர்,
ஊழியர், மாணவர்.

(சி/4576)


யாழ் மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் நடத்தும்

## கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் தேர்வு

(சர்வதேச விதிகளுக்கு அமைய)

28 - 03 - 93 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணி
இடம்: யாழ் சாதனா பாடசாலை
(கல்விக் காரியாலயத்துக்கு அருகில்)
கட்டணம்: ரூபா 25/-
விண்ணப்ப முடிவு திகதி: 27 - 03 - 93
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
கே. ஏகாம்பரம்,
செங்குந்த இந்துக் கல்லூரி, கல்வியங்காடு

விளையாட்டு உபகரணங்களுக்கு
★ யாழ் என்ரர்பிறைஸஸ் ★
இல 516, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம். (24939)


உ
குகமயம்

## தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில்

## ★ கும்பாபிஷேக தினவிழா ★

நிகழும் ஆங்கிரச வருடம் பங்குனி மாதம் 12 ஆம் திகதி நாளை (25-03-1993) வியாழக்கிழமை பகல் 10 மணியளவில் முருகப்பெருமானுக்கு நிகழவிருக்கும் சங்காபிஷேகத்திலும், சண்முகார்ச்சனையிலும், எம்பெருமான் வீதிஉலாவரும் காட்சியிலும் கலந்து, எம்பெருமான் அருள்வேண்டி சகல இஷ்ட சித்திகளையும் பெறும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமத்தில் பகல் 12 மணியளவில் நடைபெறவிருக்கும் அன்னதானத்திலும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

### மேளக்கச்சேரி

நாதஸ்வரம்:
1. அளவையூர் N.K. பத்மநாதன்
2. அளவையூர் R. கேதீஸ்வரன்
3. அளவையூர் S. சிதம்பரநாதன்

தவில்:
அளவையூர் T. உதயசங்கர்
அளவையூர் P. முருகதாஸ்
அளவையூர் N. கணேசன்

விழா உபயகாரர்,
(உயர்திரு. வே. முருகேசுசுவாமிகளும், ஏனையோரும்).

சிறுப்பிட்டி தெற்கு.
நீர்வேலி.

(24930)

## 2ஆம் வருட நினைவஞ்சலி



அன்னை மடியில்: 04 — 08 1966
ஆண்டவன் பிடியில்: 17 — 03 — 1991

### அமரர் சிவபுரநாதர் சிவராசா
(சிவன்)
(இலங்கை மின்சார சபை, சுன்னாகம், பாதுகாப்பு ஊழியர்)

திதி: 24 - 03 - 1993 புதன்கிழமை

இரண்டாண்டு முடிந்ததையா - இல்லமே
இருண்டதையா - ஆனால்
எம் மிதயம் இருக்கும் வரை - உன்
நினைவு மறையாதையா!

(இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு நன்றி)
ஓம் சாந்தி!

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அக்கா, மருமகன்.

(6066)

## 3ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டியும்



இப்புவியில்: 26 — 08 — 1936
இறையடியில்: 02 — 01 — 1993

### திருமதி பரமேஸ்வரி செல்லத்துரை
(கொத்தாவத்தை, மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை)

கணவருயிர் காக்கவெனக் கடல் தன்னை
கடக்கையில் காலன் தான் கண்டவனோ!
பொட்டோடும் பூவோடும் கொண்டவன் மடியில்
களிப்போடு தான கயிலை சென்றனையோ!

தெகிவளை 78 ஆம் இலக்க இல்லத்தில் எமது குல விளக்கும், அன்புத் தாயுமான செ. பரமேஸ்வரியின் ஆத்ம சாந்திக்காக மோட்ஷதீப அந்தியேட்டிக் கிரியைகள் இன்று நடைபெறுகின்றன.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கொத்தாவத்தை,
காங்கேசன்துறை.

(5855)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# மீண்டும் ஒரு தூண்டில்

இனப்பிரச்சினை சம்பந்தமான இறுதித் தீர்வை அரசாங்கமே வகுக்கும். அரசாங்கம் எடுக்கும் அந்த முடிவு சகலரினதும் நன்மைக்காகவும் நாட்டின் சுபிட்சத்துக்காகவும் எவ்வித அச்சமும் பாரபட்சமும் இன்றி அரசினால் நிறைவேற்றப்படும்.

இவ்வாறு புதிய ராகம் பாடியிருக்கிறார் ஜனாதிபதி பிரேமதாசா. டி. எஸ். சேனநாயக்கா நினைவு தின வைபவத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்ட காலத்தில் இருந்து, அது தெரிவிக்கும் தீர்வுக்காகவே தாம் காத்துக்கொண்டிருப்பதாகவும், அதன் முடிவை நடைமுறைப்படுத்துவதற்கு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி மேடை மேடையாக முழங்கினார். ஏன், இம்மாத முற்பகுதியில் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியின் போது கூட, தலைவர் பிரபாகரன் தனது யோசனையைத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கலாம் என்று கூறி, தனக்குள்ள பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் பாணியில் பதிலளித்தார்.

தீர்வு ஒன்றை வகுக்கும் விடயத்தில் தமக்கோ அரசாங்கத்துக்கோ எவ்வித பங்கும் இருக்கப்போவதில்லை, தெரிவுக்குழுவே அதனை முழுக்க முழுக்கக் கையாள்கிறது என்ற கருத்துப்படவே அந்தப் பதில் அமைந்தது. தலைவர் பிரபாகரனின் யோசனை குறித்து கருத்து எதனையும்கூறி, தான் இவ்விடயத்தில் பிடிபட்டுக் கொள்ளக் கூடாது நழுவி விட வேண்டும் என்ற முழு நோக்கத்துடனும் உலகத்தை ஒரு மாதிரிச் சமாளித்தார்.

ஆனால் இப்போது .? தெரிவுக்குழுவின் யோசனையைத் தானே — தனது அரசே — பரிசிலனை செய்து இறுதி முடிவு எடுக்கும் என்று சுருதி மாற்றிப் பாடுகிறார். இந்த மாற்றத்துக்கு உட்காரணம் ஒன்று இருக்கவே செய்கிறது.

வடக்கு - கிழக்கைத் துண்டாடும் தெரிவுக்குழுவின் யோசனையை நிராகரித்து அதிலிருந்து விலகிக் கொள்வதற்குக் கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் முடிவு செய்துள்ளன. முஸ்லிம் காங்கிரஸும் விலகப் போவதாக அறிவித்துள்ளது.

சிறுபான்மை மக்களின் — அவர்களது பிரதிநிதிகள் எனக் கூறப்படுவோரின் — கருத்திணக்கம் இல்லாமல் அவர்களது பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறுவதை உலகம் ஏற்காது அதனால்தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புடனேயே தீர்வு ஒன்று வகுக்கப்பட்டிருக்கிறது என்று உலகத்துக்குக் காட்ட வேண்டிய தேவை உண்டு.

அந்த ஏமாற்று நாடகத்தை அரங்கேற்றுவதற்காகவே ஜனாதிபதி இப்போது சுருதி மாற்றிப் பாடுகிறார் தூர விலகிச் சென்றுள்ள தமிழர், முஸ்லிம் கட்சிகளை மீண்டும் தமது பக்கம் இழுத்துக் கொள்வதற்காகவே இந்தப் புதிய தூண்டிலைப் போடுகிறார் அவர்.

இந்தளவு நாளும் வராத துணிச்சல் இப்போது தமக்குப் பிறந்துவிட்டதாக வேறு பேசுகிறார் அதாவது வடக்கு-கிழக்கைத் துண்டிக்காத ஒரு தீர்வைக் கூட தன்னால் நிறைவேற்ற முடியும் என்ற ஒரு பொய்மைத் தோற்றத்துக்கு வர்ணம் பூச முயல்கிறார்.

கொழும்புத் தமிழ்க் கட்சிகளினதும், முஸ்லிம் காங்கிரஸினதும் அரசியல் பரிகத்தத்தை பிரேமதாசாவின் தூண்டில் சோதிக்கப் போகிறது. செத்துக் கொண்டிருக்கும் தெரிவுக் குழுவுக்கு பிராணவாயு ஏற்ற முயற்சிக்கிறார் பிரேமதாசா. தமிழ், முஸ்லிம் கட்சிகளை மீண்டும் இழுத்துப் பொறிக்குள் போட்டு விட்டால், ஸ்ரீலங்கா, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறுவதை நியாயமற்றது எனக் காட்டித் தடுத்து விடலாம் என்பதும் ஜனாதிபதியின் ஒரு கணக்கு!

## இன்று

யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கமும் ஒன்றிணைந்து நடத்த உத்தேசித்துள்ள, உயர் தர வகுப்பு மாணவர்களுக்கு இடையிலான வருடாந்த பொது அறிவு வினாவிடைப் போட்டியின் முதல் போட்டி இன்று முற்பகல் 11 மணிக்கு மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறும். (த)

o o o

யாழ். பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ மாணவர் மன்றத்தினரின் ஏற்பாட்டில் ''யாழ்ப்பாண உற்பத்தியாளர் தமது உற்பத்திப் பொருள்களை யாழ்ப்பாணத்தில் சந்தைப் படுத்துவதில் எதிர் நோக்கும் பிரச்சினைகள்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று பிற்பகல் 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். (த 87)

o o o

ப. நோ. கூ. சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று புதன்கிழமை பி. ப 2 மணிக்கு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

யா. மா. கூ. சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் பொது நிர்வாகத் தொடர்பகப் பொறுப்பாளரும், நிதித் துறையினரும் கலந்து கொள்வர். (ஒ)

o o o

இலங்கையில் உள்ளூராட்சி மன்றங்களின் அமைப்பு'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று புதன்கிழமை பி. ப. 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழகப் புவியியல் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் உரையாற்றுவர்.

புவியியற் கழகத்தினரின் 6 ஆவது கருத்துரைத் தொடர் இதுவாகும். (ஒ)

o o o

பலாலி ஆசிரிய கலாசாலை தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் பாரதியாரின் குயில் பாட்டு என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 2 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் நடைபெறும். (த-143)

## ஆலயங்களில்

இணுவில் சிவகாமி அம்மன் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். (த)

o o o

வட்டுக்கோட்டை தெற்கு அமுதலியார் இடமென வழங்கும் முதலியார் பெருமானுக்கும் வைரவப் பெருமானுக்கும் மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலையில் நடைபெறும். தொடர்ந்து மண்டலாபிஷேகம் 45 நாள் நடைபெறும். (க-161)

## பதில்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்சித் தலைவராக நியமித்து இருப்பதாக அறிவித்தார்.

இதற்கிடையில் —

முன்னர் வந்த செய்திகளின் படி —

இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த நடைமுறைக்கு மாறாக திரு இரத்நாயக்கா பதில் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டது குறித்து சுதந்திரக்கட்சியில் பெரும்பான்மையோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என்றும் —

1983 அக்டோபர் முதல் எதிர்க்கட்சித் தலைவராகவும் பின்னர் மூன்று முறை பதில் எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்த திரு. பண்டாரநாயக்காவை, மாகாண சபைத் தேர்தல் சமயத்தில் இப்படிப் புறக்கணித்திருப்பது கட்சியில் புதிய இழுபறிகளையும், கொந்தளிப்புக்களையும் ஏற்படுத்தும் என்றும் — கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன (ஒ-எ)

## கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். இந்துக் கல்லூரிக்கும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 8-30 மணி முதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (உ-20)

★ ★ ★

யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் இடையிலான ஒன்று கூடல் கிரிக்கெட் போட்டி நாளை காலை 8-30 மணி முதல் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் அந்த ஆட்டம் 40 மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்டதாக அமையும். (உ-20)

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் கன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் லீக் முறையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ யாழ்ப்பாணம் பாரதி அணி எதிர் மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்க அணி

★ ஊரெழு றோயல் அணி எதிர் அராலி அண்ணா அணி (உ-89.

o o o

நாவாந்துறை சென். மேரீஸ் விளையாட்டுக் கழகம் நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ சென் மேரீஸ் எதிர் கிறீன்பீல்ட்

★ ஒட்டுமடம் செழியன் வி. க. எதிர் சுன்னாகம் ஸ்கந்தா வி. க. [உ]

## வீதியில் நின்ற ஓட்டோவில் சில்லு திருட்டு!

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். ஆஸ்பத்திரிக்கு அருகில் பஸ் நிலையப் பக்கமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவின் சில்லு ஒன்று நள்ளிரவு வேளை திருடப்பட்டுள்ளது.

வாடகைக்கு விடுவதற்காக வரிசையில் கடைசியாக நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவை சத்தமின்றி சிறிது தூரம் தள்ளிச் சென்று — இருந்த சில்லு ஒன்றை திருடர்கள் லாவகமாக கழற்றிச்சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-15,

## விவசாயிகளுக்கு மண்எண்ணெய்

சண்டிலிப்பாய், மார்ச் 22

சண்டிலிப்பாய் பிரதேசச் செயலர் பிரிவில் பயறுச் செய்கையில் ஈடுபட்ட 142 விவசாயிகளுக்கு முதலாவது கட்டமாக மண்எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது பிரதேச செயலர் திரு. ஹெக்டர் ஜோசவ் மேற்பார்வையில், பயறுச் செய்கை மேற்கொள்ளப்பட்ட பரப்பு அளவுக் கேற்ற மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டது. (இ-135)

## பொது அறிவு போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ். இந்துக் கல்லூரி லியோ கழகமும், சுன்னாகம் லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதயன் சுற்றுக் கிண்ணப் பொது அறிவுப் போட்டி இன்று பிற்பகல் 2-30 மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் ... பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (த)

# பிரதமர் நரசிம்மராவ் மீது நம்பிக்கைத் தீர்மானம்

## காங்கிரஸ் கட்சி நிறைவேற்றியது

புதுடில்லி, மார்ச் 24

பிரதமர் நரசிம்மராவ் மீது பூரண நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஒன்று இந்திரா காங்கிரஸின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

அவசரமாக நேற்று முன்தினம் கூட்டப்பட்ட இக் கூட்டத்தில், கட்சித் தலைவர் பதவியில் இருந்து திரு நரசிம்மராவ் விலக வேண்டும் என்று அமைச்சர் அர்ஜுன்சிங் வெளியிட்ட பகிரங்க அறிக்கை பற்றி விவாதிக்கப்பட்டது

கட்சியின் முடிவை மீறி அவர் செயல்பட்டிருப்பதாக கூட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

அறிக்கை பற்றிய தனது நிலையை கூட்டத்தில் அர்ஜுன் சிங் விளக்கினார்.

எவர் மீதும் தனிப்பட்ட முறையில் குற்றஞ்சாட்டி தாம் அறிக்கை வெளியிடவில்லை என்று அவர் தெரிவித்தார்.

அப்படியான தப்பபிப்பிராயம் ஏற்படும் பட்சத்தில்தான் அறிக்கையை வாபஸ் வாங்கிக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். அதனை அடுத்து திரு. நரசிம்மராவ் மீது நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதே வேளை—

ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணி முதல் திங்கள் அதிகாலைவரை நடந்த இந்திரா காங்கிரஸ் மத்திய செயற்குழுவின் மரதன் கூட்டத்தினால்—

கட்சியில் ஐக்கியத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் வெற்றி காணமுடியவில்லை என்று ''இந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

# நேற்றும் வெளிநடப்பு

சென்னை, மார்ச் 24

தமிழ்நாடு சட்டசபையின் கூட்டத்தில் இருந்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்றும் வெளிநடப்புச் செய்தனர்.

தங்கள் கருத்துகளைத் தெரிவிக்க சபாநாயகர் அனுமதி மறுத்துவருவதைக் கண்டித்தே தாங்கள் வெளிநடப்புச் செய்ததாக காங்கிரஸ் உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

வெளிநடப்புச் செய்வதற்குத் தேவையான காரணங்களை காலையிலிருந்தே இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் தேடிக்கொண்டிருந்தனர் என்று முதலமைச்சர் ஜெயலலிதா குறிப்பிட்டார். (உ-எ)

# தி.மு.கவுடன் காங்கிரஸ் கூட்டு சேராது என அறிவிப்பு

எந்த நிலையிலும் தி.மு.க. வுடன் இந்திரா காங்கிரஸ் கூட்டுச் சேராது.

இந்திரா காங்கிரஸின் தமிழகத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி சேலத்தில் செய்தியாளர்களிடம் முன் கண்டவாறு தெரிவித்தார்.

மதசார்பற்ற முற்போக்குச் சக்திகளுடன் மட்டுமே இந்திரா காங்கிரஸ் கூட்டு வைக்கும் என்றும் அவர் கூறினார்.

## மாகாணசபை தேர்தல்:

# ஐ. தே. க வேட்பாளர்கள் அடுத்த வாரத்தில் தெரிவு

கொழும்பு, மார்ச் 24

மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் தமது வேட்பாளர்களை ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த வாரம் தெரிவு செய்யவிருக்கிறது.

சுமார் 5ஆயிரம் பேர் வேட்பாளராக வர விருப்பம் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப்பீடத்துக்கு விண்ணப்பித்துள்ளனர் என்றும் —

அவர்கள் மத்தியில் இருந்து 417 பேரை வேட்பாளர்களாக கட்சி நிறுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## பேராதனைப் பல்கலைக்கழக

# வெளிவாரிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடக்கும்

## ஏப்ரல் 16 முதல் 27 வரையில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

பேராதனைப் பல்கலைக்கழக இறுதியாண்டு கலைமாணி வெளிவாரிப் பட்டப்படிப்பு பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபரின் கோரிக்கையை அடுத்து இந்தப் பரீட்சை அடுத்த மாதம் 16ஆம் திகதியில் இருந்து 27 ஆம் திகதி வரை இங்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது

அடுத்த மாத ஆரம்பத்தில் இங்கு வந்து சேரும் குமண கப்பலில் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும் என்றும்—

வினாத்தாள்கள் விமான மூலம் இங்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். [ஒ-3]

# மீன் என்ற போர்வையில் கடல் பாம்பு விற்பனை?

## சுகாதாரப் பகுதி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணத்தில் குறிப்பிட்ட சில சந்தைகளிலும், வீதி வியாபாரிகள் சிலரும் மீன் எனக் கூறி கடல் பாம்புகளை விற்பனை செய்வதாக புகார் கூறப்படுகிறது.

கடல் பாம்பின் தோலை உரித்துவிட்டு சிறுசிறு துண்டுகளாக வெட்டி 'பெரிய மீன்' என்று விற்பனை செய்யப்படுவதாகவும் —

பாவனையாளர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் கவனித்து மீன் துண்டுகளை வாங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடல் பாம்பை உண்பதால் இங்கு ஏற்பட வாய்ப்பு உண்டு என்றும் தெரிவிக்கப்படுகிறது

யாழ். மாநகரசபை சுகாதாரப் பகுதியினரும் இது குறித்து மக்களுக்கு அறிவுறுத்தல் ஒன்றை விடுத்துள்ளனர். (ஒ-15)

## பரீட்சை முடிவு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 24

கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற யாழ் பல்கலைக்கழக கலைப்பீடப் பகுதி I (உள்வாரி) பரீட்சை முடிவு இன்று வெளியாகும் என பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-87)

## மீனவர் காயம்

குருநகர் — மண்டைதீவுப் கடற் பகுதியில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி மண்டைதீவில் இருந்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டினால் மீனவர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றிரவு 7 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

ஆனைக்கோட்டை சாவற்கட்டைச் சேர்ந்த கே. ஜெயச்சந்திரன் (வயது 23) என்பவரே காயமடைந்தார்.

## மாகாண சபைத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திபதித் தேர்தல் நடத்தப்படக் கூடும் என்றும் அவ்வட்டாரங்கள் வாதிக்கின்றன.

இதே வேளை—

மாகாணசபைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்களைக் கோருவதன் மூலம் தமது கட்சியில் உள்ள தேசிய நாயக ஐக்கிய தேசிய முன்னணியினரை அடையாளங் காண முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சி நம்புகின்றதாம். (அ-எ)

## ஆனையிறவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துறையை நோக்கி எட்டுக் குண்டுகள் வரை வீசப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

கடலுக்குள் மூன்று குண்டுகளும் கரையில் மூன்று குண்டுகளும் வீழ்ந்து வெடித்தன. இரு குண்டுகள் வெடிக்கவில்லை.

நேற்றுக்காலை பெருமளவு பயணிகள் ஆலங்கேணியில் இருந்து வந்த போதிலும், தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

படகுத்துறையில் அதிக எண்ணிக்கையான படகுகள் தரித்து நின்ற போதிலும், மூன்று படகுகளில் மட்டும் சிறு சேதங்கள் ஏற்பட்டதாக படகோட்டிகள் தெரிவித்தனர்.

காலையில் விமானங்கள் வட்டமிட்டதால், பாடசாலைகளுக்கு வந்திருந்த மாணவர்கள், பனைச்சந்தையில் நின்ற பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் அரச ஊழியர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இதனிடையே —

ஆனையிறவுக்கு அப்பால், குஞ்சுப்பரந்தன் கடற்கரை, சுட்டதீவுப் பக்கமாக — படகுகளில் பொருள்களை ஏற்றும் பகுதிகளில் — நேற்று முன்தினம் பிற்பகல் 2-30 மணியளவில் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

இரண்டு பொம்மர்கள் மாறி மாறி நான்கு குண்டுகளை வீசின. ஒருவர் காயமடைந்தார் இரண்டு டிராக்டர்கள் சேதமடைந்தன.

## உணவுப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரப்படும் வழியில் கடலில் வைத்தும்—

மோசடி செய்யப்பட்டிருப்பதாக இரகசியப் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது

கொழும்பில் இருந்து கப்பலில் அனுப்பப்பட்ட பொருள்களின் விவரங்களையும் பருத்தித்துறைக்கு சென்றடைந்த பொருள்களின் விவரங்களையும் ஒத்துப் பார்க்கும் நடவடிக்கைகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1992 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களான சீனி, மா, அரிசி ஆகியவற்றிலேயே மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## பூநகரிப் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி முக்கிய கவனம் கொடுப்பார் என்பது நிச்சயம் என்று நம்புகின்றேன்.

இது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் படையினரின் நடவடிக்கைகளை பாதிக்காமலும்—

எமது படையினர் மீதும் மற்றும் மக்கள் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தும் வாய்ப்பை அளிக்காமலும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்— இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திறமை மிக்க தலைவர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி:- அண்மையில் ''ஹொட் ஸ்பிரிங்'' இதழ் வெளியிட்டது போன்று விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனுக்கு நீங்கள் கடிதம் எழுதினீர்களா?

தொண்டா:- ஆம் நான் திரு. பிரபாகரனுக்கு கடிதம் எழுதினேன். அதில் என்ன தவறு உண்டு? மங்கள முனசிங்கா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுடன் நான் ஒத்துப் போக முடியாத நிலை ஏற்பட்டதும் நான் திரு பிரபாகரனுக்கு கடிதம் எழுதினேன்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு நான் சமர்ப்பித்த யோசனைகளின் பிரதி ஒன்றையும் எனது கடிதம் ஒன்றுடன் அவருக்கு அனுப்பி வைத்தேன்.

கே:- பதில் கிடைத்ததா?

ப:- இல்லை. பதில் அனுப்ப வேண்டிய தேவை திரு. பிரபாகரனுக்கு இல்லை. முன்னர் அவர் என்னை யாழ்ப்பாணம் வரும்படி அழைத்த போது தெரிவுக் குழுவுக்கு இ.தொ.காவின் யோசனைகளை நான் சமர்ப்பிக்கவிருப்பதால், என்னால் அவரைச் சந்திக்க முடியாமல் இருப்பதாக அவருக்குத் தெரிவித்தேன்.

ஆகவே தெரிவுக் குழுவுடன் நான் ஒத்துப் போக முடியாத நிலை ஏற்பட்ட போது, அதற்கான காரணங்களை நான் திரு பிரபாகரனுக்குத் தெரிவிக்க வேண்டியது தர்க்க ரீதியானதாகும்.

கே:- திரு. பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் சமஷ்டி அரசமைப்பு முறையை தீர்வாக முன்வைப்பது தமிழ் மக்களுக்கு எதிரான சதி ஆகும் என்று நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். சமஷ்டித் தீர்வை நீங்கள் ஏன் எதிர்க்கின்றீர்கள்?

ப:- நாம் விரும்பும் இலட்சியத்துக்கு சமஷ்டித் தீர்வு எம்மை எடுத்துச் செல்லாது. இணைப்பை ரத்துச் செய்வது, சமஷ்டித் தீர்வு என்ற பேச்சுகள் எல்லாம் குழப்பத்தைத் தான் உருவாக்குகின்றன. இவை தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கா.

இப்படிப் பாருங்கள் சர்வசனவாக்கெடுப்பு இன்றி அரசால் சமஷ்டியை ஆதரிக்க முடியாது. ஜனாதிபதி பிரேமதாசாவே இப்படிக் கூறிவிட்டார். மக்கள் தான் இதனைத் தீர்மானிக்க வேண்டும்; பிரச்சினைகளுளன் பரிச்சயமான பொறுப்பான தலைமைத்துவம் அல்ல.

## தலைவர்களே தீர்மானிக்க வேண்டும்

பெரிய தேசியப் பிரச்சினைகளுக்கு சர்வசன வாக்கெடுப்புகளால் தீர்வு கண்டுவிட முடியாது என்பதே எனது நிலையாகும். கவனமாக பரிசீலனை செய்த பின்னர் என்ன செய்ய வேண்டும் என்பதை தலைவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

கேள்வி: இனப்பிரச்சினை விஷயத்தில் முன்னணி அமைச்சர் என்ற ரீதியில் அமைச்சரவையின் கூட்டுப்பொறுப்பு என்ற நிலைப்பாட்டை நீங்கள் மீறவில்லையா?

ப: இனப்பிரச்சினை விஷயத்தில் இ.தொ.கா. வின் தலைவர் என்ற முறையில் தான் பேசுகின்றேன் என்பதை அடிக்கடி வலியுறுத்திக் கூறி வந்துள்ளேன். நான் முன்னர் கூறியது போன்று ஒரு மனிதன் பல விதங்களில் பணி புரியலாம். ஒரு பெண்ணுக்குக் கணவனாக, இன்னொரு பெண்ணுக்குச் சகோதரனாக ஒருவன் பணிபுரிய முடியும். எனக்கு, சிறுபான்மையினரின் நலன்களை விசேடமாக தமிழ் பேசும் மக்களின் நலன்களை கவனிக்க வேண்டும் என்பதில் அக்கறை உண்டு.

கே: தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் இறுதிக்கட்டத்துக்கு வந்த சமயத்தில் அந்தக் குழுவுடன் இணைந்து போக முடியாத எண்ணத்துக்கு நீங்கள் ஏன் வந்தீர்கள்?

ப: தெரிவுக் குழு தனது பணியை செய்து கொண்டு போகும் விதத்தை நான் பார்த்தபோது, அதனால் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கும் நலன்களுக்கும் ஏற்ற விதத்தில் தீர்வு ஒன்றைக் காணமுடியாது என்பதைக் கண்டு கொண்டேன்.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சி மேற்கொள்ளப்பட்டது பற்றிய முழு வரலாற்றையுமே பாருங்கள்.

## பின்னோக்கி செல்லும் தெரிவுக் குழு

பண்டா—செல்வா ஒப்பந்தத்தைத் தொடர்ந்து டட்லி—செல்வா ஒப்பந்தம் வந்தது. இவை எல்லாம் எதிர்ச் சக்திகளால் சிதறடிக்கப்பட்டன. இந்திய—இலங்கை ஒப்பந்தம் கூட சிலரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை; இதனால் பிரச்சினையில் ஆரம்பத்துக்கே நாம் மீண்டும் சென்றோம். எப்போதும் முட்டுக்கட்டை ஏற்படுகிறது.

தமிழ் மக்களால் அடைய முடிந்தவற்றை எல்லாம் தெரிவுக் குழு இல்லாமற் செய்கின்றது என்று நான் உணர்ந்தேன். தெரிவுக் குழு பின்னோக்கி சென்றது; முன்னோக்கி அல்ல.

இணைப்பு விஷயத்தை உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளுங்கள். இந்திய—இலங்கை உடன்படிக்கை வந்தபோது இணைப்பை தமிழ் மக்கள் ஏற்றனர்.

ஆனால் இணைப்பை ரத்துச் செய்யவேண்டும் என்று தெரிவுக் குழு கூறுகிறது ஏன்? தமிழ்மக்கள் இவ்வளவு இரத்தம் சொரிந்து தியாகஞ்செய்த பின்னர் பெரும்பான்மை இனம் பின்னோக்கிச் செல்லவே விரும்புவது போன்று தெரிகின்றது. இந்த நிலையில் தெரிவுக் குழுவுடன் ஏன் நான் இணைந்து செல்ல வேண்டும் என்று கேட்கின்றேன்? இணைப்பை ரத்துச் செய்யும் வழியில் செல்வதால் என்ன பயன் ஏற்படப் போகின்றது?

கே: தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

ப: தமிழ் மக்களின் அபிலாஷைகளை அமுல் செய்யக் கூடிய பெறுமதியான தீர்வு தான் வேண்டும். தெரிவுக் குழு அதைச் செய்யவில்லை. உதாரணத்துக்கு, எனது யோசனைகளை தெரிவுக் குழு ஆராயவோ, ஏற்றுக் கொள்ளவோ இல்லை. பின்னர் ஸ்ரீநிவாசன் வருகின்றார். சமஷ்டி யோசனையை முன்வைக்கும் படி அவர் தூண்டப்பட்டார்.

## ஸ்ரீநிவாசன் திட்டம் சதி

கே: ஸ்ரீநிவாசனின் யோசனைகள் திட்டமிட்ட சதி என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

ப: ஆம். திட்டவட்டமான அடிப்படை இல்லாவிடினும் எனது நேர்மையான நம்பிக்கை அது சதி என்பதேயாகும்.

இப்படிப்பாருங்கள்—

ஸ்ரீநிவாசனின் சமஷ்டி யோசனைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் திடீரென சம்மதிக்கின்றன. அப்படி சம்மதிக்கும் நேரம் வரை, இவ்விரு கட்சிகளும் தெரிவுக் குழுவிடம் சொந்தமாக யோசனைகளை சமர்ப்பித்திருக்கவில்லை. இந்தியப் பாணியிலான சமஷ்டியை இப்போது இவர்கள் அனைவரும் விரும்புகின்றனர். திரு. பிரபாகரனுக்கு நான் எழுதிய கடிதத்தில் பிரஸ்தாபித்தபடி, இது தமிழ் மக்களுக்கு எதிரான சதியாகும், இப்படித்தான் தமிழ் மக்கள் மீது 'குதிரை' விடப்படுகிறது. தெரிவுக் குழு, பிந்திய அமர்வுகளில் [illegible] யோசனைகள் பற்றி முறையாக [illegible] பார்க்கவோ மறுத்து விட்டது. நான் விடாப்பிடியாக நின்றதால், வெறும் மரியாதை நிமித்தம் என் யோசனைகளைப் பார்த்தார்கள்; அக்கறையான நோக்கத்துடன் எனது யோசனைகள் பரிசீலிக்கப்படவில்லை. தமது அபிலாஷைகள் அங்கீகரிக்கப்பட்டு ஏனைய மக்களுடன் சரிநிகர் சமானமாக வாழும் நிலை ஏற்படும் வரை தமிழ் மக்கள் தமது போராட்டத்தைக் கைவிடமாட்டார்கள் என திரு. பிரபாகரனுக்கு எழுதிய கடிதத்தில் நான் கூறியிருந்தேன்.

கே: ஏன் திரு. பிரபாகரனை இவ்வளவு வியந்து போற்றுகிறீர்கள்; அவரை நம்பியுள்ளீர்கள்?

ப: திரு. பிரபாகரனை நான் வியந்து போற்றுகின்றேன்.

தலைவர்களை, பல்வேறு மக்கள் பல பெயர்களால் அழைக்கிறார்கள். செல்வநாயகத்தை 'சிலோன் காந்தி' என்றனர்.

திரு. பிரபாகரன் வியந்து பாராட்டப்படுகிறார்.

சிறிய உருவமான அவர் 27 உறுப்பினர்களுடன் மட்டுமே தனது இயக்கத்தை ஆரம்பித்தார். இன்று அது பெரிய இயக்கமாக வளர்ந்துள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாக தனது ஆட்களை வழிநடத்தி செயல்படுத்தி வருகின்றார்

இருநாடுகளின் (இந்தியா—இலங்கை) இராணுவங்களுடன் நின்று பிடிக்கக் கூடிய திறமையுடன் அவர் தமது போராளிகளை வழி நடத்தி வருகிறார்.

## இராணுவம் கொலை செய்யவில்லையா?

கே: திரு. பிரபாகரனின் சண்டை, கொலைகளை நீங்கள் அங்கீகரிப்பதாகக் கூறுகின்றீர்களா?

ப: சண்டையில் கொலைகள் இடம்பெறும். இராணுவமும் அதனையே செய்கிறது. ஓர் இலட்சியத்துக்காக இரு தரப்பினரும் செய்யும் காரியம் அது திரு. பிரபாகரன் சும்மா கொல்லவில்லை. ஆனால் அவர் ஓர் இலட்சியத்துக்காக சண்டை இடுகிறார்.

நியூயோர்க்கில் காரணமின்றி தினமும் பலர் கொல்லப்படுவது போன்றல்ல. பம்பாய்க் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கும் உண்மையான காரணம் எதுவும் இல்லை.

## இராணுவ நடவடிக்கை தீர்க்காது

இனப்பிரச்சினையை இராணுவ நடவடிக்கையினால் தீர்க்கமுடியாது என்று என்னால் உத்தரவாதப்படுத்த முடியும். ஆகவே எங்கு இராணுவ நடவடிக்கை இடம் பெறுகிறதோ அங்கு பதில் நடவடிக்கை இயற்கையாக இடம்பெறும். ஒவ்வொரு நடவடிக்கைக்கும் பதில் நடவடிக்கையுண்டு. வணக்கத்துக்குரிய மாபெரும் காந்தியை அரை நிர்வாணப்பக்கிரி என்று அழைத்தார்கள்.

கொல்லும்போது பிரபாகரனை கொலைகாரர் என்று அழைக்கின்றனர். அதையே இராணுவமும் செய்கிறது எங்கு சண்டை இடம் பெறுகிறதோ, அங்கு கொலைகளும் இடம்பெறுகின்றன ஆகவே இவற்றை எல்லாம் நீங்கள் தனிமைப்படுத்தி பார்க்க முடியாது என்பதுடன் ஆட்டுமியங்களுக்காக திரு பிரபாகரனை மட்டும் நீங்கள் கண்டிக்கமுடியாது.

கே:- அரசுடன் உங்கள் நிலைப்பாட்டை விட்டுக் கொடுத்துப் போகவில்லையா?

ப:- எனது நிலையை விட்டுக் கொடுப்பதா? அதனை நானும், ஜனாதிபதி பிரேமதாசாவும் மட்டுமே தீர்மானிக்க முடியும். எனது நிலை குறித்து, சம்மதத்துடன் நாம் தீர்மானிக்க முடியும். ஜனாதிபதியும் நானும் இதபற்றி தீர்மானிக்காத நிலையில் மற்றவர்கள் இதனைப் பற்றிக் கவலைப் படுவானேன், கண்டதையும் பேசுவானேன்?

கே:- மலையகத்தில் தங்களுடைய அதிகாரத் தளம் கரைந்து போவதாக கூறம் தெரிவிக்கப்படுகிறதே.

ப:- பலர் பகற்கனவு காண்கிறார்கள். [illegible] அப்படியே காணட்டும். மலையகத் தொழிலாளர் மத்தியில் இ. தொ. காவுக்கு சவாலாக இன்னொரு சக்தி இன்னும் வரவில்லை தங்களுடைய பழைய வரலாற்றை தோட்டத் தொழிலாளர் மறந்து விடவில்லை அதிகாரத்தளம் பற்றிப் பேசுவதற்கு நான் விரும்பவில்லை. எனது மக்களின் கீழ்ப்படிவுள்ள ஊழியனே நான், (அ-எ)

## புலமைப் பரிசில்

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 80 மாணவர்கள் பல்கலைக்கழகப் புலமைப் பரிசில்கள் பெறுகின்றனர்

இம் மாதம் 27 ஆம் திகதி மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் இது தொடர்பான வைபவம் நடைபெறும். (ஒ-எ)

# இரு புலி முக்கியஸ்தர்கள் பம்பலப்பிட்டியில் கைதாம்

கொழும்பு, பம்பலப்பிட்டியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் முக்கியஸ்தர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன் தினம் அதிகாலை வேளை விசேட பொலீஸ் கோஷ்டி ஒன்று இவர்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கிளிநொச்சியைச் சேர்ந்த 25 வயதான பாலசுந்தரம் இலட்சுமி என்ற பெண் என்றும், இவர் நவீன ஆயுதங்களைக் கையாளுவதில் நிபுணர் என்று நம்பப்படுவதாகவும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

மற்றைய சந்தேக நபரான இராமலிங்கம் ரவிச்சந்திரன் [வயது 30] லட்சுமியின் மைத்துனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ]

## மத்திய அரசால் தடைசெய்யப்பட்ட

# ஆர். எஸ். எஸ். இந்து பரிஷத் இயங்க தமிழகம் அனுமதி!

## சட்டசபையில் குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 24

மத்திய அரசால் தடைசெய்யப்பட்ட ஆர். எஸ். எஸ். மற்றும் இந்து விஷவ பரிஷத் ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தீவிரத் தொண்டர்களை தமிழ் நாட்டில் செயற்பட மாநில அரசு அனுமதித்துள்ளதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபையின் நேற்றைய கூட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இக் குற்றச்சாட்டைச் சுமத்தினர்.

அப்போது குறுக்கிட்டுப் பதிலளித்த முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா —

தடை செய்யப்பட்டுள்ள அமைப்புகளின் தொண்டர்கள் தமிழகத்தில் செயற்பட மாநில அரசு அனுமதிக்கவில்லை என்று தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடத்தப்பட்ட பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் தொண்டர்கள் தீவிர பங்கெடுத்தனர் என்று கூறப்படுவதைத் தொடர்ந்து எதிர்த்தரப்பினர் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தினர்.

## ம. எண்ணெய் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் இறக்கி, ஒன்றாகப் பிணைத்து அவற்றை பிளாஸ்ரிக் படகுகள் மூலம் கரைக்கு இழுத்து வரும் பணியில் தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இன்று பிற்பகலுக்கு முன் கப்பலில் இருக்கும் முழு பரல்களும் இறக்கப்பட்டு விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை —

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் ''வாதுவ'' கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகளும் நேற்று தொடர்ந்து நடைபெற்றன. அனேகமாக இந்த வேலை நாளை பூர்த்தியடையும் என எதிபார்க்கப்படுகிறது.

(உ-109-162)

## ஒலிக்கு எம். பி. பதவி?

மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் சின்னத்தில் போட்டியிடுவது என்று ஒலி அபயகுணசேகரா தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள் கட்சி முடிவு செய்துள்ளது

கட்சியின் செயற்குழு கடந்த வாரம் இந்த முடிவை எடுத்தது

இதே வேளை —

ஒலி அபயகுணசேகரா ஐக்கிய தேசியக் கட்சிப் பட்டியல் மூலம் எம்பியாக நியமிக்கப் படவிருப்பதாக அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ)

## இந்திய கிரிக்கெட் அணி ஜூலையில் இங்கு வரும்

கொழும்பு, மார்ச் 24

இந்தியக் கிரிக்கெட் அணி எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி இலங்கை விஜயத்தை மேற்கொள்ளவிருக்கிறது.

# மரண அறிவித்தல்கள்

## கந்தசாமி குமாரசாமி

கூத்தஞ்சிமா அளவெட்டி வடக்கு, அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமி - பர்வதம் அவர்களின் மகன் கந்தசாமி குமாரசாமி 22 03-1993 திங்கட்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் பாலாம்பிகையின் அன்புக் கணவரும், ஜெகமூர்த்தி (ஹொலண்ட்), சிவமூர்த்தி (மலேசியா), குபேரமூர்த்தி (ஹொலண்ட்), சுலோசனா, கல்பனா (கொழும்பு), றஞ்சனா, காஞ்னா (கொழும்பு), மோகனா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதம் (மலேசியா), ஹரிஸ்கந்தராஜா (பிரான்ஸ்), உதயசங்கர் (தவில்), கயல்விழி (ஹொலண்ட்) ஆகியோரின் அருமை மாமனாரும், ஜீவந்தினி, கானவாருதி, பாலமுருகன், அருட்குமரன் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
த. உதயசங்கர்,
(மருமகன்)

இணுவில் மேற்கு,
இணுவில்.

(24938)

## கந்தர் சின்னப்பு

(ஓய்வு பெற்ற நில அளவையாளர்)

கட்டுவனைச் சேர்ந்த கந்தர் சின்னப்பு 23-3 93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற இசைஞானவதி (M.Sc., மொழிபெயர்ப்பு தலைமை அதிகாரி), சிவஞானவதி, புனிதவதி, ஆலாலசுந்தரம் (கணக்காளர், இலண்டன்), ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற அமிர்தலிங்கம் (இராணுவ அதிகாரி), ஆ.த நடராசா (ஒய்வுபெற்ற பிரதம இலிகிதர்), வசந்தி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி உஷா சத்தியசெல்வன், றோசான் அனுஷா, திருமதி ஆஷா சேதீஸ்வரன், றிச்சு, அஞ்சு, திருமதி உமா செல்வரட்ணம், திருமதி பபி சிவசோதி, மோகன், கௌதா, சர்வேஸ், சதீஸ் ஆகியோரின் பேரனும், மயூரா, அகல்யா, தீபிகா, நிமலன், விதுரா, விக்ரா ஆகியோரின் அன்புப பூட்டனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தற்போது வசித்த உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (24-3-93) பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
சி. புனிதவதி
(மகள்)

மல்வம்,
உடுவில் தெற்கு,
சுன்னாகம்,

(5856)

# மரண அறிவிததல

## திருமதி பொன்னையா சின்னம்மா

கோண்டாவில் வடக்கில் வசிக்கும் ஆ. பொன்னையா (ஆசாரியார்) அவர்களின் மனைவி சின்னம்மா நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் திருமதி த பரஞ்சோதி, திருமதி நா. தர்மபூபதி, தங்கவேலாயுதம், திருமதி த அஞ்சலிதேவி, சந்திரபாலன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், க. தங்கராசா, நா. நடராசா, திருமதி த. அமிர்தாம்பிகை, மூ த. ஜெயலாணி, ஆகியோரின் அருமை மாமியாரும்—

பகீரதன் (ஜேர்மனி), திருமதி நாகேந்திரம் வாசுகி (கொழும்பு - 6), தமயந்தி (ஜேர்மனி), யசோதரா (ஜேர்மனி), ரெங்காதரன் (ஜேர்மனி), கிரிதரன் (கொழும்பு), தயாபரன் (கொழும்பு), தயானந்தன் தயாழினி, தயாளன், தயாருபன், கௌசலா, நிரஞ்சலா, கிசவன், விசித்திரா, அனுஷன், சசிகலா, சசிகுமார், சர்மிளா, ஜெயக்குமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் அனியாளின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கோண்டாவில் வடக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் வடக்கு டிப்போவுக்கு அருகில் உள்ள கொட்டைக் காட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்' நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி த. பரஞ்சோதி
(மகள்)

கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

(24940)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org